**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No. 76/2017 தேதி-05.11.2024

(D.W.1) - ஆக்னஸ் ஜேனட்

குறுக்கு விசாரணை

1. நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் திருவள்ளுர் மாவட்டத்தில் வசித்து வருகிறேன். நான் எத்தனை வருடங்களாக தாமசித்து வருகிறேன் என்றால் 40 வருடங்கள். என்னுடைய சொந்த ஊர் கன்னியாகுமரி மாவட்டம் குருந்தன்கோடு ஆலன்விளை ஆகும். மேற்சொன்ன ஆலன்விளையிலிருந்து வழக்கு பட்டிகை சொத்து எவ்வளவு தூரம் என்றால் 20 கி.மீ. ஆகும். இவ்வழக்கின் வாதி என் சகோதரி என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு என் சகோதரி கருங்கல் நடுத்தேரியில் தாமசித்து வருகிறார் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து வாதியின் சொத்துடன் சேர்ந்துள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு என்ன பரிகாரம் கேட்டு வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் வழிப்பாதை கேட்டு தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் எத்தனை பட்டிகை சொத்து உள்ளது என்றால் இரண்டு பட்டிகை சொத்தாகும். வழக்கு பட்டிகை சொத்து மற்றும் வாதியின் சொத்து முன்பாக மேபல்கமலம் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேந்சொன்ன மேபல் கமலத்திற்கு எவ்வளவு சொத்தின் அளவு உள்ளது என்றால் 98 செண்ட் ஆகும்.

2. நான் திருவள்ளுர் மாவட்டத்தில் இருந்ததால் வழக்கு பட்டிகை சொத்து விலை பேசியது எல்லாம் என் சகோதரி என்றால் சரிதான். என்னுடைய சொத்தும் வாதியின் சொத்தும் ஒரே கண்டமாக உள்ளது என்றால் சரிதான். நானும் என் சகோதரியும் ஒரே தேதியில்தான் பத்திரப்பதிவு செய்தோம் என்றால் சரிதான். அது வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ-2 ஆகும். மேற்சொன்ன வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ-2-இல் உள்ள சொத்தும் ஒரே கண்டமாக உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ-2 -இல் 2-ஆம் இலக்கம் சொத்து தனித்தனியாக 1.082 செண்ட் என்றால் சரிதான். ஒரே கண்டத்தில் தொட்டுதொட்டு 1.082 செண்ட் வாங்கியதற்கான காரணம் என்ன என்றால் அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு சொந்த ஊரில் மேற்சொன்ன இடத்தில் வீடு கட்டி அருகில் பேன்ஸி ஸ்டோர் வைக்க வேண்டும் என்று தான் ஒரே கண்டமாக வாங்கினோம். வழக்கு பி-பட்டிகை சொத்து எத்தனை செண்ட்

(D.W.1) - ஆக்னஸ் ஜேனட்

என்றால் தெரியாது. பி-பட்டிகை சொத்து 2.164 செண்ட் என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஏ-பட்டிகை சொத்தின் அளவு என்ன என்றால் 8.918 செண்ட் ஆகும். வழக்கின் பி-பட்டிகை சொத்தின் அளவு 1.082 செண்ட் ஆகும். வாதி தாக்கல் செய்த வழக்கின் பி-பட்டிகை சொத்தின் அளவு எவ்வளவு என்றால்1.082 செண்ட்.

3. பி.வா.சா.ஆ.1-ன்படி வழக்கு பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் என்னுடைய இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன 1.082 செண்டானது பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1-ஆம் இன சொத்தை தொடாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1-இல் வழங்கப்பட்ட அவகாசத்தில்தான் என்னுடைய வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன என் வீடு தகுந்த அதிகாரிகளால் Plan Approval பெற்றுதான் கட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன Plan Approval வாங்கும்போது பி-பட்டிகை சொத்தை வழிப்பாதையாக காட்டித்தான் Plan Approval பெறப்பட்டது என்றால் வழிப்பாதை ஏதும் Plan Approval பெறும்போது காட்டவில்லை. மேற்சொன்ன Plan Approval ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எனக்கு பாத்தியப்பட்ட 1.082 செண்ட் தனியாக பிரித்து காட்ட காம்பவுண்ட் சுவரோ, வேலிக்கல்லோ, மண் வரப்போ உள்ளதா என்றால் காம்பவுண்ட் சுவரோ, வேலிக்கல்லோ, மண்வரப்போ இல்லை, கல் இருந்தது ஆனால் தற்போது கல் ஏதும் இல்லை. மேற்சொன்ன ஒரே கண்டமாக உள்ள சொத்திற்கு செல்ல பி-பட்டிகை சொத்தை பொதுப்பாதையாக உபயோகப்படுத்தியிருந்தோம் என்றால் சரிதான். நான் வீடு கட்டியப்பிறகுதான் பிரச்சனை செய்ய ஆரம்பித்தார்கள்.

4. வழக்கு பி-பட்டிகை சொத்தானது கருங்கல், குளச்சல் ரோட்டிலிருந்து மேற்கு பக்கமாக உள்ளது என்றால் சரிதான். தற்போதும் என்னுடைய சொத்தும் வாதியின் சொத்தும் பி-பட்டிகை சொத்தும் ஒரே கண்டமாகதான் உள்ளது என்றால் சரிதான். பி-பட்டிகை சொத்தின் கிழக்கு பக்கம் ஒரு பெரிய வளைவு (Artch) உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தில் காட்டப்பட்ட சொத்துதான் வழக்கின் பி-பட்டிகை சொத்து என்றால் சரிதான். ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்துடன் தாக்கல் செய்யப்பட்ட புகைப்படத்தில் உள்ள பெரிய வளைவு (Artch)

(D.W.1) - ஆக்னஸ் ஜேனட்
மற்றும் இரும்பு கதவு உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன (Artch) மற்றும் இரும்புக் கதவுகள் என்னிடம் கேட்காமலே என் சகோதரி அமைத்துக்கொண்டார். தற்போதும் மேற்சொன்ன (Artch) மற்றும் இரும்பு கதவுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன (Artch) மற்றும் இரும்பு கதவு 1998-ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்றால் சரியல்ல. எந்த வருடம் கட்டப்பட்டது என்றால் 2016-ஆம் வருடம் கட்டப்பட்டது. வழக்கின் பி-பட்டிகை சொத்தின் வழியாகத்தான் வாதியின் வீட்டிற்கு மின் இணைப்பு செல்கிறது என்றால் சரியல்ல. என்னுடைய பத்திரப்படி 1.082 செண்ட் மட்டுமே உள்ளது. பி-பட்டிகை சொத்தின் வழியாகத்தான் வாதியின் வீட்டிற்கு கார் சென்று வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி- பட்டிகை சொத்தின் தென்பக்கத்தில் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டது என்றால் எனக்கு உரிமைப்பட்ட காம்பவுண்ட் சுவர் உள்ளது. தென் பக்கத்தில் உள்ள காம்பவுண்ட் சுவரில் கான்கீரிட்டாலான Flower Box அமைத்து செடிகள் வளர்த்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் அங்கு செல்லவில்லை என்பதால் வாதி செடிகளை வளர்த்துவருகிறார்.

5. மேற்சொன்ன காம்பவுண்ட் சுவரில் எத்தனை அடி நீளம் உள்ளது என்றால் 133 லிங்ஸ் உள்ளது. நான் கோரியுள்ள வஸ்துவில் பிரித்தால் வாதியின் வீட்டிற்கு கார் மற்றும் இரு சக்கர வாகனங்கள் செல்ல முடியாது என்றாலும் வாதியின் வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கப்பட முடியாது என்றால் சரியல்ல. வாதியின் வீட்டில் எதிரில் அவருக்கு சொந்தமாக 10 செண்ட் இடம் உள்ளது அதில் காரை நிறுத்திக்கொள்ளலாம், பி-பட்டிகை சொத்தின் மூலம் மின் இணைப்பு எடுத்துக்கொள்ளலாம். நான் தாக்கல் செய்த எதிர் உரையில் மேற்சொன்ன வாதிக்கு சொந்தமான 10 செண்ட் இடம் உள்ளது என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வாதியின் வீடான ஏ-பட்டிகை சொத்திற்கு செல்ல பி-பட்டிகை சொத்தை தவிர வேறு வழிப்பாதை இல்லை என்றால் சரியல்ல. அவர்களுக்கு சொந்தமான 1.082 செண்ட் இடம் உள்ளது. தற்போதும் நானும் வாதியும் அவரவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு செல்ல பி-பட்டிகை சொத்தை வழிப்பாதையாக உபயோகித்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் என் முதல் விசாரணையில் வழக்கின் பி-பட்டிகை சொத்தை பொதுப்பாதையாக விட்டுக்கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் முதல் விசாரணையில்

(D.W.1) - ஆக்னஸ் ஜேனட்
தெற்கு பக்கத்தில் பாக்கு மரம் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் அது என்னுடைய எதிர் உரையிலோ பதிலுரையிலோ(Counter) சொல்லவில்லை என்றால் சரியல்ல.

6. வழக்கின் பி-பட்டிகை சொத்திற்கும் எனக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கும் இடையே உள்ள சொத்துதான் வழக்கின் ஏ-பட்டிகை சொத்து என்றால் சரிதான். வழக்கின் பி- பட்டிகை சொத்து எங்களுக்கு மட்டும் தனியாக பாத்தியப்பட்டது என்று காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன் என்றால் அளித்துள்ளேன். மேற்சொன்ன காவல் நிலையத்தில் நாள் அளித்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கின் பி-பட்டிகை சொத்தை பொதுப்பாதையாக இருதரப்பும் விட்டுக்கொடுத்து தற்போதும் உபயோகித்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள Counter Claim-நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி அமைதியாக அனுபவித்து வருகின்ற பி-பட்டிகை சொத்தை தடை செய்யவேண்டும் என்பதால்தான் நான் Counter Claim தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சொத்தை அபகரித்து எடுத்துக்கொண்டு என்னை உள்ளே அனுமதிக்கவில்லை. நான் கோரியுள்ள Counter Claim அனுமதிக்கப்பட்டால் எனக்கோ வாதிக்கோ சுயமாக அனுபவிக்க முடியாது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள Counter Claim தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் வாதி கோரியுள்ள பரிகாரம் வழங்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.